1979 ஏப்ரல் 17]

புயல் மழையினால் ஏற்பட்ட பாதிப்பு.

*வினா எண். 715—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978 நவம்பர் 4-வது வாரத்தில், புயல் மற்றும் பலத்த மழையின் காரணத்தினால், கிழக்கு கடற்கரையோர கிராமங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனவா?

(ஆ) அதனால் ஏற்பட்ட பாதிப்பென்ன?

(இ) அதற்காக அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ), (ஆ) (இ) அவை முன் ஒரு @ விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

*வினா எண் 716—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கடந்த 1978-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 24-ம் நாளில் ஏற்பட்ட புயலினால் இராமநாதபுரம் மாவட்டத்தில், பாதிக்கப்பட்ட வீடுகள், போட்டுகள், மிஷின் போட்டுகள், பயிர் நிலங்கள், குளங்கள், ஊரணிகள், கிணறுகள், வாழைத் தோட்டங்கள், கொடிக்கால்கள், புஷ்பத் தோட்டங்கள் இவைகளின் விபரம் யாது?

(ஆ) பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) & (ஆ) அவைமுன் ஒரு † விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

@ 264–267-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

† 268–271-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1979 ஏப்ரல் 17

திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, விவரமான அறிக்கை இராமாயணம் போல் இருக்கிறது. இதற்கு உப கேள்வி கேட்டோம் என்று சொன்னால் அது பிரசங்கம் போல் இருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொல்வார்கள். மதிப்பிற்குரிய தலைவர் அவர்களும் மணியடிப்பார்கள். இருந்தாலும் சுருக்கமாகக் கேட்டுத்தான் ஆக வேண்டும். விவர அறிக்கையிலே முதலில் பாதிக்கப்பட்ட, மீனவர்களுக்கு ஒரு வாரத்திற்கு ஒரு குடும்பத்திற்கு 5 கிலோ வீதம் அரிசி வழங்கப்பட்டது என்றும் பிறகு பாதிக்கப்பட்டவர்களுக்கு 15 கிலோ அரிசியும் கொடுக்கப்பட்டது என்றும் சொல்லப்பட்டு இருக்கிறது. இந்தப் பாகுபாடுக்குக் காரணம் என்ன? சென்னையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 50 கிலோ அரிசி கொடுக்கப்பட்டது. ஆனால் கிராமங்களிலோ அல்லது கடல் ஓரங்களிலோ உள்ள பாதிக்கப்பட்டவர்களுக்கு 5 என்றும் 15 என்றும் கொடுக்கப்படுகிற பாகுபாடான நிலைமைக்கு அடிப்படைக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இராமாயணத்தை எவ்வளவு விளக்கமாகக் கம்பர் எழுதியிருக்கிறார் என்பது எல்லோருக்கும் தெரியும். அதைப் போல் இங்கே விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள் என்பதைத்தான் நான் சொன்னேன். இந்த அவையிலே நான் பலமுறைகள் சொல்லியிருக்கிறேன். பாதிக்கப்பட்டவர்களுக்கு 5 கிலோ அரிசி கொடுக்கப்படுவது என்பது எப்போதும் உள்ள அரசினுடைய ஆணை. சிறப்பு ஆணையாக பல நேரங்களிலே அது மாற்றப்பட்டு அதிகமான நிவாரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அவையிலேயே எந்த எந்த மாவட்டங்களிலே 50 கிலோ அரிசி கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். சென்னைக்கு மட்டும் அல்ல, தமிழ் நாட்டில் பாதிக்கப்பட்ட எல்லோருக்கும் சிறப்பாக ஒரு ஆணை போட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : தலைவர் அவர்களே, விவசாயிகள் பாதிக்கப்படக்கூடிய அளவிற்கு கிணறுகள், வாழைத் தோட்டங்கள், புஷ்பத் தோட்டங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதனால் அந்த விவசாயிகளுக்கு ஏற்படுகிற செலவை அடுத்த ஆண்டு வசூல் செய்யாது, இனாமாகக் கொடுக்க அரசு முன் வருமா? மேலும் தூராகிவிட்ட கிணறுகளை எல்லாம் சரி செய்து விவசாயிகளைக் காப்பாற்ற அரசு முன்வருமா?

1979 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இந்த அவையிலே ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. மீண்டும் மீண்டும் அதே கேள்வியைக் கேட்கிறார்கள். கேட்கட்டும் அதைப் பற்றி பரவாயில்லை. ஆனால் இந்த அவையிலே ஏற்கெனவே சொல்லப்பட்டதைப்பற்றி மீண்டும் மீண்டும் இங்கே கேட்காமல் இருந்தால் அவையின் நேரத்தைக் காப்பாற்ற முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிறப்பு விதியாக இந்த ஆண்டு போட்டு சிறிய விவசாயிகளுக்கு கிணறு தூர்ந்துபோனாலும் நிலம் மண் மேடிட்டுப் போனாலும் அதற்கான முழுச் செலவையும் அரசு ஏற்றுக் கொண்டு இருக்கிறது. ஆனால் அதைப்போல் பெரிய விவசாயிகளுக்கு அதிகப்படி ஆயிரம் ரூபாய் மானியமாகவும் மற்றவைகளை 30 மாதங்களில் செலுத்தும் கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, இப்போது சிறிய விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்று பாகுபாடு செய்து அவர்களுக்கு உதவி செய்வதாகச் சொன்னார்கள். ஏற்கெனவே விவசாயத் துறை அமைச்சர் ஒட்டு மொத்தமாக என்று சொல்லி கையை விரித்துவிட்டார்கள். சிறிய விவசாயிகளுக்கு அரசு எந்த அளவிற்கு உதவி செய்யும் என்பதைச் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, விவசாய அமைச்சர் மொத்தமாகச் சொன்னார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் சொல்லும்போது நானும் கவனித்துக் கொண்டுதான் இருந்தேன். அவர் சிறிய விவசாயி, பெரிய விவசாயி என்று பார்த்துத்தான் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். உங்களுக்குச் சந்தேகம் என்னவென்று சொன்னால் பதில் சொல்லுகிறேன்.

திரு. பொ. விஜயராகவன் : தலைவரவர்களே, 1978 நவம்பர் கோர மழையின்பொழுது குமரி மாவட்டத்தில் பல புரவுகள் குறிப்பாக பல கீழ்குளம் புரவு, உண்ணாமலைக்கடை புரவு, மண்காடு புரவு ஆகிய புரவுகளில் உடைப்பு ஏற்பட்டு நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் சேதம் அடைந்தன. அந்த உடைப்புகள் இன்னும் அடைக்கப்படவில்லை. ரெவின்யூ துறையைக் கேட்டால் எங்களுக்கு அது பொறுப்பு இல்லை என்று சொல்லி கை கழுவி விடுகிறார்கள். பஞ்சாயத்தைக் கேட்டால் எங்களுக்குப் பொறுப்பு இல்லை என்று சொல்லி விடுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் குறிப்பிட்ட ஒரு இடத்தைப் பற்றிக் கேட்டால் பதில் இருக்காது. பொதுப்படையாக இருப்பதை விட்டு விட்டு, குறிப்பிட்டுக் கேட்டால் அதை அனுமதிப்பதால்தான் நேரம் வீணாகிறது.

திரு. பொ. விஜயராகவன் : இப்படிப்பட்ட இடங்களில் ஒவ்வொரு துறையும் தட்டிக் கழித்துக்கொண்டே போகிறது. ஆகவே, ரெவின்யூ அமைச்சரவர்கள் இதில் தலையிட்டு இந்த உடைப்புகளை மீண்டும் அடைத்துக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் நிவாரண வேலைகளைச் செய்வதற்கு அரசு உத்தரவு போட்டு, அந்தந்த இலாக்காக்களுக்குப் பணம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அந்த இலாக்காக்கள் நடைமுறைப்படுத்தி வருகிறது. எங்கேயாவது செய்யவில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னால் உடனடியாக ஆவன செய்ய அரசு ஏற்பாடு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, வினா எண் 717.

திரு. வி. கே. கோதண்டராமன் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோ பாயிண்ட் ஆப் ஆர்டர். கேள்வி நேரத்திலே கிடையாது. நீங்கள் உட்காருங்கள். நான் அடுத்த கேள்விக்குப் போய்விட்டேன்.

அத்தியாவசியப் பண்டங்கள் பதுக்கல்.

*வினா எண் 717— திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-78-ம் நிதி ஆண்டில் டிசம்பர் முடிய அவசியப் பண்டங்களை பதுக்கியதற்காக எத்தனை பேர் கைது செய்யப் பட்டனர்?

(ஆ) அவர்களின் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?